தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விஜய, சித்திரை 20, திருவள்ளுவர் ஆண்டு – 2044

2013 மே 3, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்"

நீதி நெறிமுறைகள் தவறாமல் குடிமக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளரை மக்கள் ஒப்பற்ற தெய்வம் என்று மதித்துப் போற்றுவார்கள்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 380, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

380—

துணை மின் நிலையம்

***7708—திரு. என்.வி. காமராஜ்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யத்தில் 110/11 K.V. *திறனுடைய துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தற்போது வேதாரண்யத்தில் 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் 5 M.V.A. *திறனுடைய மின்மாற்றியுடன் இயங்கி வருகிறது. இத்துணை மின் நிலையத்தின் உச்ச மின்பளு 4.9* M.V.A. *ஆகும். பெருகிவரும் மின் பளுவைக் கருத்தில்கொண்டு 5* M.V.A. *திறன் கொண்ட மின்மாற்றியை, 8* M.V.A. *திறன்கொண்ட மின்மாற்றியாக மாற்றுவதற்கு நிருவாக அனுமதி பெறப்பட்டு, மின்மாற்றி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 8* M.V.A. *மின்மாற்றி ஒரு மாத காலத்திற்குள் நிறுவப்பட்டு, இயக்கத்திற்குக் கொண்டு வரப்படும். இப்பகுதியில் உள்ள மின் பளுவை நிறைவு செய்ய 8* M.V.A. *திறன்கொண்ட மின்மாற்றியுடன்கூடிய 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையமே போதுமானதாகும். எனவே, வேதாரண்யத்தில் புதியதாக 110/11 கிலோ வோல்ட் திறனுடைய துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.*

திரு. என்.வி. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்குத் தாங்களே கைதட்டி, அவர்களில் கண்ணாடி முன் நின்று வீரமில்லாமல் மார்தட்டி பேசி நிற்கும் வாய்ச்சொல் வீரர்களை வாய் பொத்தி, கைகட்டி, வனவாசம் அனுப்பி வைத்து வீரச் செயல்புரிந்து வரும் வெற்றி தெய்வம் அன்னையை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாயிரம் மைல்கள் கடந்து பல்லாயிரம் பறவைகள் வந்தடையும் இடம் பறவைகள் சரணாலயம். அம்மா ஆளும் வீரத் தமிழ்நாட்டின் தென்கிழக்கு முனை கோடியக்கரை, கிழக்குக் கடற்கரையின் தென் கோடி முற்கால, பிற்கால சோழ மன்னர்களின் கலங்கரை விளக்கமும், வெளிர் மான்கள், புள்ளி மான்கள் வலம் வரும்

2013 மே 3]

வனம், அரிய வகை மூலிகைகள் ஆயிரம் ஆயிரம் அடர்ந்து நிற்கும் இடம், பல கோடி மதிப்புள்ள மீன்களைக் குவிக்கும் இடம், நாகப்பட்டினத்தின் ஒளிமுகம். இதன் பெருமைகளை இதுவரை இருந்தவர்கள் உணராமல் போக அம்மாவின் ஆட்சியில் அறியப்பட்டு, பறவைகள் சரணாலயத்தை கோடியக்கரை வன உயிரின சரணாலயமாக அறிவிக்கப்பட்டமைக்கு அம்மாவின் வழிநிற்கும் மக்களின் சார்பில் தமிழ்நாட்டின் தன்னிகரற்ற ஒரே முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாகவும் என் சார்பாகவும் நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.

தற்சமயம் வேதாரண்யத்தில் 20 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்ட 33/11 K.V. திறனுடைய துணை மின் நிலையம் இயங்கி வருகிறது. மின் பயன்பாடு அதிகம் தேவைப்படுவதால் அடிக்கடி மின் தடை ஏற்படுகிறது. கோடியக்கரை, கோடியக்காடு ஆதனூர், கடிநல்வயல், கருப்பம்பழம், நெய்விளக்கு, பெரியகுத்தகை, ஆயக்கரம்புலம் ஆக 22 கிலோ மீட்டர் சுற்றளவில் 1,200 மும்முனை தொழில் மின் இணைப்புகளும், 5 உயர் மின் அழுத்தம் H.T. 11,000 வோல்டேஜ் உள்ள மின் இணைப்பும், வீடுகள், கடைகள், அலுவலகங்கள், ஆக 22,210 மின் இணைப்பும், 150 டிரான்ஸ்ஃபார்மர் மின் இயங்கிகளும் இருந்து வருகின்றன. இம்மின் நிலையம் அதிக அளவில் மின்சாரத் துறைக்கு கட்டணம் கட்டக்கூடிய நிலையமாகச் செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், சுருக்கமாக கேள்வியைக் கேளுங்கள்.

திரு. என்.வி. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உப்பு உற்பத்தியில் இரண்டாவது இடமாக வேதாரண்யம் திகழ்வதால் உப்பு உற்பத்திக்கு ஆழ்குழாய்க் கிணறு மற்றும் போர்வெல்மூலம் தண்ணீர் எடுப்பதற்கு மும்முனை மின்சாரம் அதிக அளவில் தேவைப்படுகிறது.

இந்திய பாதுகாப்பைக் கருதி கடலோரக் காவல் படை, கப்பல் படை, விமானப் படை அலுவலகங்கள் மற்றும் கலங்கரை விளக்கம் ஆகியவற்றிற்கு 24 மணி நேரமும் மின்சாரம் வழங்க வேண்டியுள்ளது. எனவே இதையெல்லாம் கருத்தில் கொண்டு வேதாரண்யத்தில் 110/11 K.V. திறனுள்ள துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மக்களின் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்து வைக்கின்ற மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று மேற்படி துணை மின் நிலையத்தை விரைவில் அமைத்துத் தர வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை எழில் கொஞ்சும் சுற்றுலாத் தலமாக வளர்ந்து வரும் முக்கிய நகரமான வேதாரண்யத்திலே தற்போது 5 M.V.A. திறன் கொண்ட மின்மாற்றிகளுடன் 33/11 கிலோ வோல்ட் திறன் உள்ள துணை மின் நிலையம் இயங்கி வருகின்றது. அந்த மின் பளுவும் ஏறத்தாழ 10 M.V.A. திறன் கொண்ட மின்மாற்றிகள்மூலமாக மட்டுமே நிறைவு செய்யக்கூடிய வகையிலே ஏறத்தாழ 4.9 M.V.A. என்ற அளவிலே மின்பளு இருக்கின்றது. ஆகவேதான் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, அங்கே உள்ள கூடுதல் மின் பளுவை எதிர்கொள்ளும்முகத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்கு ஏற்கெனவே அங்கே இயங்கிவரும் 5 M.V.A. திறன் கொண்ட மின்மாற்றிக்குப் பதிலாக புதியதாக 8 M.V.A. திறன் கொண்ட மின்மாற்றியாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து இந்த ஒருமாத காலத்திற்குள்ளாகவே அதை நிறுவுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் நிச்சயமாக எடுக்கும் என்பதை மீண்டும் ஒருமுறை உறுதிபடத் தெரிவிக்கின்றேன். இப்போது இருக்கின்ற மின்பளுவிற்கு 8 M.V.A. திறன் கொண்ட மின்மாற்றியே போதுமானது. ஏனென்று சொன்னால், 4.9 M.V.A. திறன்கொண்ட மின்பளுவிற்கு 8 M.V.A. திறன் கொண்ட மின்மாற்றியேத் தாராளமாகப் போதுமானதாக இருக்கும். மற்றொன்று இந்த 33/11 K.V. திறன் கொண்ட துணை மின் நிலையத்தை நேரடியாக 110/11 K.V. திறன் கொண்ட துணை மின் நிலையமாக மாற்றியமைக்க இயலாது. ஏற்கெனவே இந்த 33/11 K.V. துணை மின் நிலையத்திலே 8 M.V.A. திறன் கொண்ட மின்மாற்றி அமைக்கப்படவிருக்கிறது. மீண்டும் மின் பளு ஏதாவது வருங்காலத்திலே அதிகரித்தால் கூடுதலாக இன்னொரு 8 M.V.A. திறன் கொண்ட மின் மாற்றியை மாற்றி, அதற்குப் பின்பாக

அந்த இரண்டு 8 M.V.A. திறன் கொண்ட மின்மாற்றிகளும் அங்குள்ள மின் பளுவை சமாளிப்பதற்குப் போதாது என்ற நிலை வந்த பின்புதான் அதை 110/11 KV திறன் கொண்ட துணை மின் நிலையமாக மாற்ற இயலும். ஆகவேதான் இப்போது 8 M.V.A. திறன் கொண்ட மின்மாற்றி போதுமென்று சொல்கிறேன். இனி வருங்காலத்தில் தேவை ஏற்பட்டாலும்கூட, இன்னும் அதே திறனுடைய கூடுதலாக ஒரு 8 M.V.A. திறன் கொண்ட மின்மாற்றியை மாற்றி, அதற்குப் பின்பும் கூடுதலாக மின்பளு ஏற்பட்டால்தான் அங்கே 110/11 K.V. திறன் கொண்ட துணை மின் நிலையமாக அதை மாற்ற முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நிச்சயமாக இந்த 8 M.V.A. திறன் கொண்ட மின்மாற்றியை மாற்றியதற்குப் பின்பு மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த குறைந்தழுத்த மின்பளு பிரச்சினைகள், மின்சாரப் பிரச்சினைகள் ஏற்படாது என்பதைத் தெரிவித்து, தேவை ஏற்பட்டால் மீண்டும் ஒருமுறை ஆய்வு செய்து அங்கு கூடுதல் மின்மாற்றி தேவை என்ற நிலை ஏற்பட்டால் அதை நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.*

திரு. என்.வி. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் தொகுதி தமிழ்நாட்டினுடைய கிழக்கு கடற்கரையில் கடைக்கோடி தொகுதியாக இருக்கின்ற காரணத்தினால் அடிக்கடி மின் அழுத்தம் ஏற்படுகின்றது. ஆகவே, 110/33 K.V. திறன் கொண்ட துணை மின் நிலையம் வேண்டுமென்று வலியுறுத்தி அதற்கான கருத்துருவும் அனுப்பப்பட்டிருக்கின்றது. ஆகவே, அதையெல்லாம் மனதில் கொண்டு வருங்காலத்தில் அமைத்துக் கொடுத்தால் வேதாரண்யம் தொகுதி மக்களுக்கெல்லாம் பயன்படுகின்ற வகையிலே இருக்கும் என்பதைத் தெரிவித்து, நன்றிகூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு தெளிவாகச் சொல்லி இருக்கிறேன்.*

இப்போது இருக்கின்ற மின்பளுவிற்குக் கூடுதலாக 8 M.V.A. திறன் கொண்ட மின்மாற்றி மாற்றியதற்குப் பின்பு இந்தப் பிரச்சினையே வராது. அதற்கு வேண்டிய மின்பளு ஏற்படுவதற்கு இன்னும் ஓராண்டு காலமாகும். அதற்குப் பின்பு மற்றொரு 8 M.V.A. திறன் கொண்ட மின்மாற்றி அமைக்கும் அளவிற்கு மின்பளு வருவதற்கு இன்னும் 2, 3 வருடங்களாகும். அந்தப் பகுதியிலே இப்போது அமைக்கப்படவிருக்கும் 8 M.V.A. திறன் கொண்ட புதிய கூடுதல் மின்மாற்றியே இந்தப் பிரச்சினைகள் எல்லாவற்றிற்கும் முற்றுப்புள்ளி வைக்கும். 110/11 K.V. துணை மின் நிலையம் போட்டால்தான் இப்பிரச்சினை முடியுமென்று தொழில்நுட்பரீதியாக யாரோ தவறான தகவல் தெரிவித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. தேவை ஏற்படின் 33/11 K.V. துணை மின் நிலையமோ அல்லது 110/11 K.V. துணை மின் நிலையமோ அமைக்கலாம். அந்தப் பகுதியினுடைய மின்பளுவின் அளவிற்கேற்ப தேவைப்படும் திறன் கொண்ட power transmitters என்று சொல்லக்கூடிய மின்மாற்றிகளை அமைத்தாலே தொழில்நுட்பரீதியாக அங்குள்ள பிரச்சினையை சரிசெய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேதாரண்யத்திலே இப்போது தமிழ்நாடு மின்சார வாரியம் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்குப் பிறகு கூடுதலாக 8 M.V.A. திறன் கொண்ட மின் மாற்றியை அமைத்ததற்குப் பின்பு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் மின்சாரப் பற்றாக்குறை, மின்னழுத்தக் குறைவுப் பிரச்சினைகள் நிச்சயமாக அங்கே வராது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை உறுதிபடுத்தித் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்மாற்றியைப் போலவே, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இன்றையதினம் மின் கட்டணத்தை மாற்றியமைப்பது குறித்து ஒரு கூட்டத்தை அவசர அவசரமாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மின் கட்டணத்தை உயர்த்துவதற்கு ஆணையம் ஏதாவது திட்டமிட்டிருக்கிறதா? இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தகவல்*

2013 மே 3]

வந்துள்ளதா? இந்த மின் கட்டண உயர்வு இருக்குமா, இருக்காதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மின் கட்டணத்தை உயர்த்த திட்டமிட்டிருக்கிறதா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். மத்திய அரசினுடைய மின்சார ஒழுங்குமுறை ஆணையம் ஓர் உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது, மத்திய அரசு, ஆண்டுக்கு ஒரு முறை மின் கட்டணத்தை மாற்றியமைக்க வேண்டும். ஆனால், அப்படி மாற்றியமைக்கவில்லையென்று சொன்னால் அந்தந்த மாநிலத்தினுடைய மின்சார ஒழுங்குமுறை ஆணையமே தன்னிச்சையாக அந்த மின் கட்டணத்தை மாற்றி அமைத்துக்கொள்ளலாம் என்று மத்திய அரசு சட்டத்திலே விதிமுறைகள் இருக்கின்ற காரணத்தினால், தமிழ்நாடு மின்சார வாரியம் அல்லது அந்தந்த சம்பந்தப்பட்ட மின் வாரியங்கள் அந்த மின்சாரக் கட்டண மாற்றத்திற்குரிய பரிந்துரைகளைச் செய்யவில்லையென்று சொன்னால், மத்திய அரசினுடைய நிதி உதவிகள் அத்தனையும் நிறுத்தப்படும் என்றும் அங்கே அறிவுறுத்தியிருக்கிறார்கள். நீங்கள் பயப்படுவதுபோல் இப்பொழுது மக்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு நிச்சயமாக மக்களுக்கு கூடுதல் மின் கட்டண பளுவை ஏற்படுத்தாது. இன்றைக்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மின் கட்டணத்தை உயர்த்த பரிந்துரை செய்யும் சூழ்நிலையில் இல்லை. ஆனால், மின் கட்டணத்தை அல்லது அமைப்புக் கட்டணத்தை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மாற்றியமைத்தாலும்கூட, அந்தக் கட்டணம் முழுவதையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசே ஏற்றுக்கொள்ளும் என்பதால் பொது மக்களுக்கு இதில் எந்தவிதப் பிரச்சினையும் ஏற்படப்போவதில்லை. ஏற்கெனவே இருக்கின்ற கட்டணம் மட்டும் கட்டிவந்தால் போதுமானது என்ற நிலைதான்வரும். இதை நேரடியாக நாங்கள் சொல்லமுடியாது. எங்களுடைய அதிகார வரம்பிற்குட்பட்டதல்ல. இருந்தாலும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் ஏதாவது மத்திய அரசினுடைய வற்புறுத்தலினால்*

விதிமுறைகளுக்கேற்ப மின் கட்டணத்தை மாற்றியமைத்தாலும், மாற்றியமைக்கப்படுவதால் வருகின்ற கூடுதல் கட்டணத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசே ஏற்றுக்கொள்ளும். மின் பயனாளிகள் எந்தவித கூடுதல் மின் கட்டணமும் செலுத்தவேண்டிய அவசியம் எழாது என்பதை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சில பத்திரிகையாளர்களும், சில அரசியல்வாதிகளும் இதை ஒரு பிரச்சினையாக்க முயற்சிக்க வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 381, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

381—

பசுமை வீடு திட்டம்

***19683—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடு திட்டத்தின்கீழ் குளச்சல் தொகுதியிலுள்ள பயனாளிகளுக்கு வீடுகள் விரைந்து கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடு திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு ரூபாய் ஒரு இலட்சத்து எண்பதாயிரம் அலகுத் தொகையில் 2011–2012 ஆம் ஆண்டில் 101 வீடுகளும், 2012–2013 ஆம் ஆண்டில் 124 வீடுகளும் ஆக மொத்தம் 225 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. இந்த நிதியாண்டில் 99 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள்